## GOVERNMENT OF TAMIL NADU

## DEPARTMENT OF EX-SERVICEMEN'S WELFARE

## APPLICATIONS ARE INVITED FROM THE QUALIFIED CANDIDATES FOR THE POST OF WELFARE ORGANISER BY DIRECT RECRUITMENT IN THE DEPARTMENT OF EX-SERVICEMEN'S WELFARE

**Date of Notification:15.02.2016**

| Name of the Post | No. of vacancies | Reserved for | | | Grade Pay | Scale of Pay |
|---|---|---|---|---|---|---|
| Welfare Organiser | 18 | Gen Turn | : | 4 | Rs. 4,800/- | PB-2 Rs. 9,300-34,800 |
| | | BC | : | 5 | | |
| | | MBC & DNC | : | 4 | | |
| | | SC(A on p.b.) | : | 1 | | |
| | | SC | : | 3 | | |
| | | BC(M) | : | 1 | | |
| | | Total | : | 18 | | |

GT: General Turn, BC: Backward Class (other than Backward Class Muslim), MBC & DNC: Most Backward Classes and Denotified Communities, SC (A on p.b.): Scheduled Castes (Arunthathiyars on Preferential basis), SC: Schedule Castes, BC(M): Backward Class Muslim.

**Minimum Qualifications:**

1. Minimum General Educational Qualifications specified in Schedule I to the General Rules (SSLC pass)
2. Must be a Military Pensioner after serving in the rank of Junior Commissioned Officer in the Army or its equivalent rank in the Navy or Air Force.
3. Must not have completed three years from the date of retirement from the Defence Forces, on the date of selection for appointment.
4. Must not have completed, 53 years of age for the candidates belonging to SC/ST, MBC&DNC and BC candidates and 48 years of age in case of candidates belonging to other than the SC/ST, MBC&DNC and BC on the date of selection for appointment.
5. Must be a resident of Tamil Nadu.

**Note:**

(1) The Serving Junior Commissioned Officers who are on the verge of retirement / discharge / release from the defence forces within a period of one year from the date of notification (i.e) 15.02.2016 for the post of Welfare Organiser are also eligible to apply in accordance with Government of India, Ministry of Personnel, P.G. & Pensions (Department of Pers & Training), New Delhi Office Memorandum No.36034/2/91-Estt. (SCT), dated:03.04.1991 and G.O.Ms.No.915, Public (Ex-Servicemen) Department, dated:10.09.2009, they should submit a certificate from his Commanding Officer and an undertaking.

(2) Willing and eligible Ex- Junior Commissioned Officers and the eligible serving Junior Commissioned Officers can download the format of application and the format of certificate from Commanding Officer, and the undertaking, from the Departmental Website http://www.tn.gov.in/exwel The prescribed application format can also be obtained from the District Ex-Servicemen's Welfare Office. The formats duly filled in should reach the **"Director, Directorate of Ex-Servicemen's Welfare, 22, Raja Muthiah Salai, Chennai-600 003"** within 30 days from the date of publication (on or before **21 March 2016)**.

(3) Applications have to be sent with all the required enclosures.

Director,
Directorate of Ex-Servicemen's
Welfare, Chennai – 600 003

## தமிழ் நாடு அரசு
## முன்னாள் படைவீரர் நலத் துறை

முன்னாள் படைவீரர் நலத்துறையில் நல அமைப்பாளர் பணியிடங்கள் நேரடி நியமனம் மூலம் நிரப்பிட கீழ்குறிப்பிட்டுள்ள தகுதி வாய்ந்த முன்னாள் இளநிலைப் படை அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**அறிவிக்கை நாள்: 15.02.2016**

| பதவியின் பெயர் | காலியிட எண்ணிக்கை | இட ஒதுக்கீடு விவரம் | | | தர ஊதியம் | சம்பள ஏற்றமுறை |
|---|---|---|---|---|---|---|
| நல அமைப்பாளர் | **18** | பொ.பி. | : | 4 | **ரூ.4,800/–** | **PB-2 ரூ.9,300–34,800** |
| | | பி.வ. | : | 5 | | |
| | | மி.பி.வ. & சீ.ம. | : | 4 | | |
| | | ப.வ. (அ.மு.அ) | : | 1 | | |
| | | ப.வ. | : | 3 | | |
| | | பி.வ.(மு) | : | 1 | | |
| | | மொத்தம் | : | 18 | | |

பொ.பி.: பொதுப் பிரிவு, பி.வ.: பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்(முஸ்லீம் அல்லாதவர்), மி.பி.வ.&சீ.ம.: மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர், ப.வ.: பட்டியல் வகுப்பினர், ப.வ,(அ.மு.அ.): பட்டியல் வகுப்பினர் (அருந்ததியினர் முன்னுரிமை அடிப்படையில்), பி.வ.(மு).: பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்(முஸ்லீம்).

**குறைந்த அளவிலான தகுதிகள்:**

(அ) குறைந்த பட்ச கல்வித்தகுதி - எஸ்.எஸ்.எல்.சி. தேறியிருத்தல் வேண்டும்

(ஆ) இராணுவத்தில் இளநிலைப் படை அலுவலராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்று ஓய்வூதியம் பெறுபவராக இருத்தல் வேண்டும்.

(இ) இப்பணிக்கு தெரிவு செய்யப்படும் நாளின் போது, படைப்பணியிலிருந்து ஓய்வு பெற்று 3 ஆண்டு காலத்திற்குள் இருத்தல் வேண்டும்.

(ஈ) இப்பணிக்கு தெரிவு செய்யப்படும் நாளில் ப.வ., மி.பி.வ.&சீ.ம. மற்றும் பி.வ., இனத்தைச் சார்ந்த விண்ணப்பதாரர்கள் 53 வயது பூர்த்தியடையாதவர்களாகவும், ப.வ., மி.பி.வ.&சீ.ம. மற்றும் பி.வ., இனத்தைச் சாராத விண்ணப்பதாரர்கள் 48 வயது பூர்த்தியடையாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

(உ) தமிழ் நாட்டைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும்.

**<u>குறிப்பு:</u>**

(1) படைப்பணியில் இருக்கும் இளநிலைப் படை அலுவலர்கள், இவ்வறிவிக்கை நாளான 15.02.2016 அன்றிலிருந்து ஓராண்டு வரை படைப்பணியிலிருந்து விடுவிப்பு பெறுபவர்கள் அரசாணை எண்.915, பொது(முன்னாள் படைவீரர்)த் துறை நாள்:10.09.2009-ன் படி, விண்ணப்பிக்கலாம். அவ்வாறு படைப்பணி புரிந்து வரும் இளநிலைப் படை அலுவலர்கள் வரையறுக்கப்பட்ட உரிய படிவத்தில் ஆவண காப்பக அலுவலரின் சான்று மற்றும் உறுதி மொழிப் படிவத்துடன் விண்ணப்பிக்க வேண்டும்.

(2) விருப்பமும், தகுதியும் வாய்ந்த தமிழ் நாட்டைச் சார்ந்த ஓய்வு பெற்ற முன்னாள் இளநிலைப் படை அலுவலர்கள் மற்றும் படைப்பணியில் இருக்கும் இளநிலைப் படை அலுவலர்கள் உரிய விண்ணப்ப படிவம், பணிபுரிந்து வரும் முப்படை இளநிலை அலுவலர்களுக்கான ஆவண காப்பக அலுவலரின் சான்று (Certificate from Commanding Officer) மற்றும் உறுதிமொழிப் படிவம் ஆகியவற்றினை http://www.tn.gov.in/exwel என்ற இணைய தளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். வரையறுக்கப்பட்ட விண்ணப்பங்கள் மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகங்களிலும் கிடைக்கும். இவ்விண்ணப்பப் படிவங்களை தக்க விவரங்களுடன் பூர்த்தி செய்து, **“இயக்குநர், முன்னாள் படைவீரர் நல இயக்ககம், 22, ராஜா முத்தையா சாலை, சென்னை – 600 003.”** என்ற முகவரிக்கு இவ்வறிவிக்கை வெளியிடப்பட்ட நாளில் இருந்து 30 நாட்களுக்குள் (21**.03.2016** அன்று அல்லது அதற்கு முன்னதாக) வந்து சேருமாறு அனுப்ப வேண்டும்.

(3) விண்ணப்பங்கள் உரிய அனைத்து இணைப்புகளுடன் அனுப்புதல் வேண்டும்.

இயக்குநர்,
முன்னாள் படைவீரர் நல இயக்ககம்,
சென்னை – 600 003